# BOOKS LIST FOR PERPARING TNPSC EXAMS

## GROUP – 4, VAO, GROUP – 2 A (NON – INTERVIEW) & GROUP – 2 ( PRELIMINARY & MAIN ) தேர்வுகளுக்கு தயாராவோர் படிக்க வேண்டிய புத்தகங்கள் -- சிறு அறிமுகம்.

அன்புடன் : புத்தன் சாத்தூர்

பொது தமிழ் தேர்வு செய்து இருந்தால் தமிழ் 6வது வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை சமச்சீர் கல்வி பாடத்திட்ட புத்தகங்கள் மற்றும்

தமிழ் இலக்கிய வரலாறு -- மு. வ. அல்லது வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு -- பாக்கிய மேரி அல்லது தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம் -- தேவிரா அல்லது பன்முக நோக்கில் **தமிழ் இலக்கிய வரலாறு** -- கா. வாசுதேவன் எழுதியது. இவற்றில் ஏதாவது ஒன்றை கட்டாயம் படியுங்கள்.

சமச்சீர் கல்வி புத்தகத்தில் இருக்கும் தமிழ் இலக்கணப் பகுதியை படிப்பதற்கு சிரமமாக இருப்பதாக நினைப்பவர்கள் முதலில் பழைய பாடத்திட்ட 6, 7, 8ம் வகுப்பு புத்தகங்களில் உள்ள இலக்கணப்பகுதியை படியுங்கள், பின்பு சமச்சீர் புத்தக இலக்கணப்பகுதியை படியுங்கள். அல்லது "நற்றமிழ் இலக்கணம்" எழுதியவர் டாக்டர் சொ.பரமசிவம் ( பட்டு பதிப்பகம் வெளியீடு ) படியுங்கள்.

பொது ஆங்கிலம் தேர்ந்தெடுத்திருந்தால் 6 – 12ம் வகுப்பு வரை சமச்சீர் கல்வி பாடத்திட்ட ஆங்கில புத்தகங்கள் மற்றும் HIGH SCHOOL ENGLISH GRAMMAR AND COMPOSITION - WREN & MARTIN படியுங்கள் ( KEY TO HIGH SCHOOL ENGLISH GRAMMAR AND COMPOSITION - WREN & MARTIN ). மேலும் OBJECTIVE GENERAL ENGLISH - SP. BAKSHI (or) OBJECTIVE GENERAL ENGLISH – R.S. AGARWAL படிப்பது கூடுதல் மதிப்பெண்கள் பெற உதவும்.

கணிதம் , அறிவியல், சமூக அறிவியல் 6 – 10ம் வகுப்பு வரை சமச்சீர் கல்வி பாடத்திட்ட புத்தகங்கள் படியுங்கள் .

திறனறி வினாக்களுக்கு ( கணிதத்திற்கு ) R.S. AGARWAL எழுதியுள்ள QUANTITATIVE APTITUDE & A MODERN APPROACH TO VERBAL REASONINGல் தேர்வுக்குரிய பாடப்பகுதியை படித்து கணக்குகளை செய்து பாருங்கள் ஆங்கிலத்தில் இருக்கும் இந்த புத்தகத்தை புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் என்று கருதினால் " கணியன் பதிப்பகம் வெளியிட்டுள்ள TNPSC கணிதம் பாகம் 1 மற்றும் பாகம் 2 ( நூல் ஆசிரியர் : வ.பழனிகுமார் ) அல்லது சக்தி பப்ளிஷிங் ஹவுஸ் வெளியிட்டுள்ள கணிதம் & நுண்ணறிவுத்திறன் புத்தகங்களை படியுங்கள்.

11 & 12ம் வகுப்பு இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, புவியியல் புத்தகங்களில் தேர்வுக்குரிய பாடப்பகுதிகளை மட்டுமே படியுங்கள். ( உதாரணமாக 11ம் வகுப்பு வரலாறு புத்தகத்தில் 1 முதல் 22 வரை உள்ள பாடப்பகுதிகளில் 14, 15 & 23வது பாடங்களை படிக்க வேண்டியதில்லை. அதைப்போலவே 12ம் வகுப்பு வரலாறு புத்தகத்தில் 9, 10, 13, 14, 15, 16, 17 & 33ம் பாடங்களை மட்டும் படித்தால் போதுமானது ) புவியியல் பாடத்திற்கு அட்லஸ் (Oxford Students Atlas / Oxford School Atlas ) துணையுடன் படித்தல் மிகுந்த பயன்தரும்.

11 & 12ம் வகுப்பு பொருளாதாரம், அரசியல் அறிவியல், மற்றும் 12ம் வகுப்பு இந்தியப் பண்பாடு படியுங்கள். பணவீக்கம்,வங்கி விலை கட்டுப்பாடு முறைகள்,வங்கியின் பணக் கொள்கை,அரசின் நிதிக் கொள்கை போன்ற தற்கால செய்திகளை படியுங்கள்.

நடப்பு நிகழ்வுகளுக்கு தினசரி செய்தித்தாள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

THE HINDU அல்லது தி ஹிந்து தமிழ், மற்றும் தினமணி நாளிதழ் வாசியுங்கள். மேலும் நடப்பு நிகழ்வுகளை விரிவாக வெளியிடும் ஏதாவது ஒரு போட்டித்தேர்வு மாத இதழ் படியுங்கள்.

நடப்புநிகழ்வுகளை ஆங்கிலத்தில் அறிந்துகொள்ள கீழ்க்கண்ட இணைய இணைப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

http://www.jagranjosh.com/current-affairs

http://www.gktoday.in/

http://www.ibpsguide.com/search/label/current%20affairs

http://www.jbigdeal.com/current-affairs-question-answers-mcq

நடப்புநிகழ்வுகளை தமிழில் அறிந்து கொள்ள

http://www.tnpsctagaval.in/2015/02/current-affairs-2014-full-pdf.html

கடைசியாக வெளிவந்த மனோரமா இயர் புக்

## GROUP -2 MAIN தேர்வுக்கு சற்றே விரிவாக படிக்க வேண்டும்.

அறிவியல் பாடத்திற்கு பழைய பாடத்திட்ட 9 & 10ம் வகுப்பு புத்தகங்களை படியுங்கள். 9 & 10ம் வகுப்பு புத்தகங்களை ஆங்கிலவழி கல்வியில் (ENGLISH VERSION ) படிக்க எண்ணுபவர்கள் NCRT புத்தகங்களை படியுங்கள்.

வரலாற்றை விரிவாக படிக்க டாக்டர் க. வெங்கடேசன் அல்லது தர்மராஜ் எழுதியுள்ள

01) இந்திய விடுதலைப்போராட்ட வரலாறு / Indian Struggle For Independence

02) சமகால இந்திய வரலாறு / HISTORY OF CONTEMPORY INDIA 1947 – 2012

03) தற்கால தமிழ்நாட்டு வரலாறு / HISTORY OF MODERN TAMILNADU 1600 – 2011

04) தமிழக வரலாறு – பகுதி 1& 2 – ஆர். முத்துக்குமார் ( கிழக்கு பதிப்பகம் ) படியுங்கள்.

அரசியல் அறிவியல் பிரிவில் 01) இந்திய அரசியலமைப்பு - தர்மராஜ் மற்றும் 02) பொதுத்துறை ஆட்சியியல் - தர்மராஜ் படியுங்கள். அல்லது இந்திய அரசியல் பற்றி ஜெயராஜ் அல்லது சந்திரசேகர் எழுதியுள்ள புத்தகங்கள்.

பொருளாதாரம் பற்றி தமிழில் விரிவாக படிப்பதற்கு திரு.வே.கலியமூர்த்தி அல்லது ராதா எழுதியுள்ள இந்திய பொருளாதாரம் படியுங்கள்.

தட்சிணா மூர்த்தி எழுதிய தமிழர் நாகரிகமும்,பண்பாடும் **படியுங்கள்**

இந்திய அரசு வெளியிடும் திட்டம் மாத இதழ் (தமிழ்) அல்லது YOJANA ( ENGLISH ) படியுங்கள். இந்த புத்தகத்தை பெறுவதற்கு ஆசிரியர், திட்டம் மாத இதழ், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, சென்னை-

BUDDHAN SATTUR

600 006 . தொலைபேசி எண் 044 – 28272382 என்னும் முகவரிக்கு தொடர்புகொள்ளுங்கள் ( வருட சந்தா ரூ.100- என்றே எண்ணுகிறேன் ) இப்புத்தகத்தை ஆங்கிலத்தில் படிக்க yojana.gov.in என்ற இணைய முகவரியை பயன்படுத்துங்கள்.

GENERAL STUDIES FOR COMPETITIVE EXAMINATIONS – TATA McGRAW HILL / ARIHANT

SCIENCE & TECHNOLOGY IN INDIA - SPECTRUM BOOKS Pvt Ltd.

INDIAN POLITY FOR CIVIL SERVICE EXAMINATIONS - M. LAXMIKANTH

DEVELOPMENTS IN SCIENCE AND TECHNOLOGY - SPECTRUM BOOKS Pvt Ltd.

INDIAN ECONOMY - RAMESH SING ( PRATIYOGITA DARBAN'S RELEASE )

SOCIAL PROBLEMS IN INDIA - RAM AHUJA

## இந்து சமய அறநிலையத்துறை பணிகளுக்கு தயாரவோர் கீழ்க்கண்ட புத்தகங்களை படியுங்கள்

01) இந்துமத இணைப்பும் விளக்கமும் – ஆறுமுக நாவலர்
02) சைவமும் வைணவமும் -- ஆறுமுக நாவலர்
03) சைவ வினா விடை பகுதி 1 & 2 -- ஆறுமுக நாவலர்
04) இந்து ஞான மரபில் ஆறு தரிசனங்கள் -- ஜெயமோகன்

## VAO தேர்விற்கான புத்தகங்கள்

தமிழக அரசின் சார்பாக கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள
01) கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் குடிமக்கள் நடைமுறை நூல்
02) கிராம நிர்வாக அலுவலர்களின் அதிகாரங்களும் கடமைகளும்

## மேற்கண்ட புத்தகங்கள் அனைத்தும் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் பலரும் கூறியதின் தொகுப்பே ஆகும்

அன்புடன் : புத்தன் சாத்தூர்


திரு. T.செந்தில்குமார் ML (Deputy commissioner of police, Flower Bazar, Chennai )
அவர்களின் தேர்வுக்கான சிறந்த புத்தகங்களின் பரிந்துரை

TNPSC– தமிழக வரலாறு

மாணவர்கள் முடிந்தவரையில் தரமான பாடநூல்களையே (Text books) படிக்கவும். Guide,notes என ஆரம்பத்திலேயே சுருங்கி விட வேண்டாம். முக்கியமாக கொள்குறி வினா விடை நூல்களை படிப்பதை கண்டிப்பாக தவிர்க்கவும். பயிற்சி செய்து பார்க்க மட்டுமே material ஆக பயன்படுத்த வேண்டும் . அதுவும் இது போன்ற தேர்வு இல்லாத நேரங்களில் தரமான புத்தங்களை ஆழ்ந்து உள்வாங்கி படிக்கவும்.
TNPSC –யை பொறுத்தவரையில் தமிழ்நாடு - வரலாறு, புவியியல், அரசியல், பொருளாதாரம், சமுதாய

பண்பாடு சார்ந்த நிகழவுகள் மற்றும் திராவிட இயக்கம்,சுயமரியாதை இயக்கம் சார்ந்த பகுதிகளில் இருந்து முதனிலை (Preilms) மற்றும் முதன்மை (main) தேர்வுகளில் அதிக கேள்வி கேட்க படுகிறது.
அதுமட்டுமின்றி நமது மொழி, இடம் சார்ந்த வரலாறு என்பதால் கண்டிப்பாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும் தான்...
தமிழ்நாடு வரலாறு குறித்து சமீபத்தில் சில புத்தகங்கள் படித்தேன் அருமையாக இருந்தது. தகவல் பெட்டகமாய் உள்ளது...

1. முற்கால தமிழ்நாட்டு வரலாறு (கி.பி 1600 வரை) - க.வெங்கடேசன்
2. தற்கால தமிழ்நாட்டு வரலாறு (கி.பி 1600 - 2012) - க.வெங்கடேசன்

இந்த இரு புத்தகங்களிலும் நிகழ்வுகள் கோர்வையாக, சங்ககால மன்னர்கள், ஆட்சி நிர்வாகம், படையெடுப்புகள், சமுதாய பழக்க வழக்கங்கள்,ஆங்கிலேயே ஆட்சியாளர்கள், கொள்கை முடிவுகள், ஆங்கில ஆட்சியில் சென்னை மகாண சட்டமன்றம், சுயமரியாதை இயக்கம், நீதி கட்சி, சுதந்திரத்திற்கு பிறகு திராவிட இயக்கம்,அரசியல் கட்சிகள் வளர்ந்த விதம், ஆட்சியமைத்த நிகழ்வு என புள்ளி விவரங்களோடு சொல்லப்பட்டுள்ள தரமான புத்தகம் ஆகும்.

3&4 தமிழக வரலாறு – பகுதி 1& 2 - ஆர்.முத்துகுமார், கிழக்கு பதிப்பகம்

எளிய நடையில், விறு விறுப்பாய் தமிழக வரலாற்றை சுவையோடு சொல்லியுள்ளார். அதுவும் சம கால தமிழக வரலாறு எளிதாக புரிந்துகொள்ளும் வகையில், மனதில் பதியும் வகையில் விளக்கபட்டுள்ளது. மாணவர்கள் படிக்கலாம்,அரசியல் வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தாலும் எளிதாகபுரிந்து கொள்ளும்விதமாய் உள்ளதால் கட்டுரை வடிவில் எழுத மிகவும் உதவிகரமாய் இருக்கும்.

தமிழ் இலக்கிய வரலாறு

தமிழ் இலக்கிய வரலாறு கண்டிப்பாக, கவனமாக படிக்க வேண்டும். இலக்கிய வரலாறு என்பது தமிழ் சார்ந்த 100 வினாக்களில் மட்டுமின்றி, பொது அறிவு பகுதியிலும் அதிகளவில் கேட்கபடுகிறது. உதாரணத்துக்கு...

1. வேளாண் வேதம் என அழைக்கப்படும் நூல் எது?
2. நாலாயிர திவ்ய பிரபந்தத்தை தொகுத்தவர் யார்?
3. 99 மலர்கள் குறித்து குறிப்பிட்டுள்ள நூல் எது?
என்பது போன்ற வினாக்கள் ஆகும்.

தமிழ் இலக்கிய வரலாறு குறித்து மு.வ, மது.ச.விமலானந்தம், அடைக்கலராஜ், பாக்கியமேரி, இன்னும் பல நூல்களை படித்திருக்கிறேன். ஆயினும் போட்டித் தேர்வுக்கும் சரி, படிப்பதற்கு எளிதாக, பயனுள்ளதாக, தகவல் செறிந்துள்ளதாக இருப்பது,

1. ‘ புதிய நோக்கில் தமிழ் இலக்கியவரலாறு - தமிழண்ணல்’

எழுதியுள்ள புத்தகம் தான். தமிழ் இலக்கியங்கள், சங்க இலக்கியங்கள் ,பல மொழிகளிலும், எல்லா திசைகளையும் சென்றடைய வேண்டும் என்ற ஆதங்கம் உடையவர். நல்ல தரமான நூலாகும். படித்து பயன்பெறவும். அதேபோல்,

2. ‘தமிழ் இலக்கிய வரலாறு - சிற்பி பாலசுப்ரமணியன்’

எழுதி கவிதா பப்ளிகேஷன் வெளியிட்டுள்ள புத்தகமும் சிறப்பாக உள்ளது.
3. ‘தமிழ் இலக்கிய கலை களஞ்சியம் - தேவி ராஜேந்திரன்’

BUDDHAN SATTUR

திரு. தேவிரா போட்டித் தேர்வு - தமிழ் இலக்கிய பாடத்திற்கு வகுப்பு எடுப்பவர் என்பதால், போட்டித் தேர்வு சார்ந்து எழுதப்பட்டுள்ள நல்ல நூலாகும்.

தமிழ் சமுதாய பண்பாட்டு வரலாறு

1.தமிழர் நாகரிகமும்,பண்பாடும் - அ. தட்சணமூர்த்தி
2.தமிழக வரலாறும் பண்பாடும் - வே.தி.செல்வம்
3.தமிழக சமூக பண்பாட்டு வரலாறு - தங்கவேல்
தமிழர்களின் பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள், வழிபாடுகள், நாகரீக வளர்ச்சி,கருவிகள் பயன்பாடு, ஆடை பயன்பாடு, போர்திறன், திருமண சடங்கு போன்ற வாழ்வியல் சார்ந்த நிகழ்வுகளை இந்த நூல்களில் படித்தறியலாம்
.
'தமிழ் இலக்கணம்" (Group1&2)
பாடத்திட்டம், மீண்டும் தமிழுக்கு,தமிழ் இலக்கணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதமாக வரலாம். அது போன்ற நிலையில் மாணவர்கள்

'நற்றமிழ் இலக்கணம் - சொ. பரமசிவம்

இந்த புத்தகம் இலக்கணம் குறித்து முழுமையாக எழுதப்பட்டுள்ளது. எிமையாக புரிந்து கொள்ளும் விதமாக, போட்டித் தேர்வுகளுக்கு மிகவும் பயனளிக்கும் விதமாக உள்ளது சிறப்பம்சம் ஆகும். மாணவர்கள் புத்தங்கள் வாங்க, மெட்டீரியல் சேகரிக்க, குறிப்புகள் நகல் எடுக்க, படிப்பு சார்ந்த செலவிற்கு ,செலவு செய்ய தயங்கவே தயங்காதீர்கள்.

TNPSC போட்டித் தேர்வை பொறுத்தவரையில் அதிகபட்சம் ரூ. 5000 ல் அனைத்து புத்தகமும் வாங்கி விடலாம். ஆனால் நீங்கள் Group 4 ல் வெற்றி பெற்றுவிட்டாலே மாதம் ரூ. 14000 சம்பளம் பெறமுடியும். ஆதலால் வாழ்க்கைக்கு அடித்தளம் இடக்கூடிய,கௌரவத்தை,அங்கீகாரத்தை தரக்கூடிய, நமது தன்னம்பிக்கையை மீட்டெடுக்ககூடிய இந்த போட்டி தேர்வுகளுக்கு புத்தகம் வாங்குவது என்பதை மிகப்பெரிய மூலதனமாக கருதவும். ஓசி புத்தகம்,அடுத்தவர் எடுத்த குறிப்பு, பிறர் எழுதி வைத்த நோட்ஸ் என்பதை போன்றவற்றை கண்டிப்பாக தவிர்க்கவும்.

என்ன விலை கொடுத்தாலும் சொந்தமாக புத்தகம் வாங்குங்கள், ஏனெனில் உங்கள் விருப்பம்போல் குறித்து வைக்கமுடியும்,அடிக்கோடு இடலாம் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் படிக்க முடியும். சொந்த குறிப்பு தயார் செய்யுங்கள்அப்பொழுது தான் உங்களுக்கு மனப்பாடம் ஆகும். பாடம் சார்ந்த தெளிவு கிடைக்கும்.

என்னிடமே நிறையபேர், நண்பர்கள், ஜீனியர்கள் என பலர் உங்கள் நோட்ஸ் உள்ளதா? நோட்ஸ் கொடுங்கள் நகல் எடுத்துவிட்டு தருகிறோம் என பலமுறை கேட்டதுண்டு, உண்மை என்னவெனில் நான் எடுத்த குறிப்புகளை படித்து பார்த்து, இன்னும் நிறைய தகவல் கொடுக்க வேண்டும் என பலமுறை நானே கிழித்து போட்டுள்ளேன். ஆதலால் பாடத்திட்டத்தை (syllabus) வரிக்குவரி படியுங்கள். அது சார்ந்த புத்தகத்தை வாங்குங்கள். நீண்ட நேரம் ஆர்வமாக படியுங்கள், மகத்தான வாழ்க்கை அமைய போகிறது என்பதை எண்ணி படியுங்கள். உங்களுக்கு புரியும் விதமாக குறிப்பு எடுத்து கொள்ளுங்கள், மீண்டும் மீண்டும் படித்து பாருங்கள், கட்டுரை வடிவில் எழுத தெளிவு கிடைத்து விடும்.

தமிழ் இலக்கியங்களில், இயற்கை அழகு, காதல், வீரம்,கற்பனை மட்டுமின்றி நம்மை நாமே ஊக்குவித்து கொள்ளகூடிய எழுச்சி பெறச் செய்யக்கூடிய, சுயமுன்னேற்ற பாடல்கள் நிறைய உள்ளன. தோல்விகளிலிருந்து என்னை மீண்டு எழச் செய்தது குமரகுருபரின் இந்த தேவ வரிகள் தான்...

BUDDHAN SATTUR

மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார்,
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் -செவ்வி
அருமையும் பாரார் , அவமதிப்பும் கொள்ளார்,
கருமமே கண்ணாயினார் .......

மீண்டும் மீண்டும் படித்து பாருங்கள்..
யுத்தத்தில் வெற்றி கொள்ளும் உத்தியை பெற்று விடுவீர்கள்.. வாழ்த்துக்கள்!
ஆம்! நம்மால் முடியும்...







குருப் 2 தேர்வில் வெற்றி பெற படிக்க வேண்டிய புத்தகங்கள் பற்றி

திரு. சோ. பார்த்தசாரதி (ஆணையாளர், ஜோலார்பேட்டை நகராட்சி) அவர்களின் பரிந்துரை.

பொது தமிழ் பள்ளி-பாடப் புத்தகம்,ஒரு வழிகாட்டி நூல்,நாம் வெளியிட்ட நூலையும் பார்க்கலாம்.

வரலாறுபழைய-தமிழக வரலாறு -ய பாட நூல் 6-7,

பண்டைய வரலாறு,இடைக்கால வரலாறுபள்ளி சமச்சீர் பாடப் புத்தகம்-,ஆங்கிலத்தில் Arihant புத்தகம் படிக்கலாம்.

நவீன வரலாறு+-2புத்தகம்,பழைய பத்தாவது வரலாறு பாடப்புத்தகம்.

புவியியல்சமச்சீர் ஆறு முதல் பத்து வரை போதும்-,அதில் படித்தால் குருப் ஒன்று வரை தேரலாம்.

அரசியல் - ஆறு முதல் பத்து வரை சமச்சீர் புத்தகத்தில் உள்ள குடிமையியல் பகுதி தான் பாடப் பகுதிகள்,பின் +1,+2 வில் உள்ள அரசியல் அறிவியல் படியுங்கள்,ஆங்கிலம் வாசிக்க முடிந்தால் Indian Polity by Laxmikanth படியுங்கள்.

பொருளாதாரம் பள்ளி சமச்சீர் பாடப் பகுதியில் உள்ள பொருளாதாரம் படியுங்கள்,+1 பொருளாதாரம் படியுங்கள்,+1,+2 வணிகவியல் படியுங்கள்இது தவிர்த்து பணவீக்கம்.,வங்கி விலை கட்டுப்பாடு முறைகள்,வங்கியின் பணக் கொள்கை,அரசின் நிதிக் கொள்கை போன்ற தற்கால செய்திகளை படியுங்கள்.

அறிவியல் பாடத்தை பொறுத்தவரை பள்ளி பாடப் புத்தகம் போதும்.

கணித திறனாய்விற்கு சக்தியின் வெளியீடு நன்றாக உள்ளது,

மேற்கண்டவற்றை படித்து தற்கால செய்திகளுக்கு கடந்த ஆறு மாத செய்திகள் பார்த்தால் நீங்கள் தான் குருப் இரண்டின் முதல் மாணவர்.

## குருப் 2 மெயின் தேர்வுக்கு படிக்க

BUDDHAN SATTUR

அறிவியல் 9 மற்றும் 10 ஆவது மற்றும்(சமச்சீருக்கு முந்தய பாடத் திட்டம்)
இயற்பியல்,வேதியியல்,உயிரியல் இந்த மூன்றிலும் +1,+2 புத்தகத்தில் பயன்பாடு தொடர்புடைய பாடங்களை படியுங்கள்,சமூக பொருளாதார பிரச்சினைகள் +1 பொருளாதாரம் படியுங்கள்.
தமிழ்நாடு அரசு நிர்வாகம் தொடர்பான பகுதிக்கு மாநில அரசு நிர்வாகம் அரசியல் அமைப்பு தொடர்பான புத்தகத்தில் இருந்து படிக்கலாம்அறிவியல .ஂ தொழில் நுட்பம்,சமூக பொருளாதாரப் பிரச்சினைகள்,மாநில அரசு நிர்வாகம் பற்றிய பகுதி குருப் 1 மெயின் தேர்வுக்கும் பயன்படும்,எனவே இதை நன்கு படியுங்கள்,உறுதியாக குருப் 1இல் வெற்றி பெறலாம்

## Group 1 Preliminary Exam Reference Books:

UNIT – I  General science :
Reference book: School Science Book-State Board Samacheer as Well as Old Syllabus From 6th to 10th.and 11th and 12th-Applied Science.
Refer ISRO, DRDO, CSIR and Biotechnology and Genetic Engineering related topics thro' Internet.

UNIT  II. Current Events
Refer: Hindu,Dinamani news paper for at least 6 months prior to Exams. Even u can Refer Jagranjosh.com website also.

UNIT – III Geography  Ear
Refer: School Social Science book(samacheer Syllabus) from 6th to 10th. U can also Refer Arihant General Knowledge Book.

UNIT – IV History and culture of India
Refer: School Books from 6th to 12th(Samacheer and Old Syllabus) and Independent History of India and Tamilnadu History By Venkatesan( 2 separate Books).

UNIT – V  INDIAN POLITY
Refer: Indian Constitution By Laxmikant.School +1,+2 political Science

UNIT – VI  INDIAN ECONOMY
Refer: Indian Economics By Ramesh Singh, Pratiyogita Darpan Special Edition For Economics.and also u can Refer Arihant General Knowledge .

UNIT – VII  INDIAN NATIONAL MOVEMENT
Refer: Independence History of India by Venkatesan and Contemporary History of India by Venkatesan.

UNIT – VIII – APTITUDE & MENTAL ABILITY TESTS  Refer: Aptitude by R.S.Agarval and School Maths Book from 6th to 9th.

## Reference books for Group I Services (Main Examination)

### PAPER – I - General Studies

Topics for Descriptive type

BUDDHAN SATTUR

UNIT  I . Modern history of India and Indian culture -Reference book
Independence History of India by Venkatesan and Contemporary History of India by Venkatesan.

UNIT  2. General Aptitude & Mental Ability
Refer: Aptitude by R.S.Agarval and School Maths Book from 6th to 9th.

UNIT  3. Role and impact of science and technology in the development of India and Tamil Nadu.
Reference book: School Science Book-State Board Samacheer as Well as Old Syllabus From 6th to 10th.and 11th and 12th-Applied Science.
Refer ISRO, DRDO, CSIR and Biotechnology and Genetic Engineering related topics thro' Internet.

## PAPER – II - General Studies

UNIT – I  Indian polity and emerging political trends across the world affecting India and Geography of India
Refer: Indian Constitution By Laxmikant.School +1,+2 political Science,School Social Science book(samacheer Syllabus) from 6th to 10th. U can also Refer Arihant General Knowledge Book.

2. Tamil language, Tamil society  it's culture and Heritage / English Language
தமிழர் நாகரீகமும் பண்பாடும்-தட்சிணாமூர்த்தி,நாட்டுப்புறக்கலைகள்- சக்திவேல்,தமிழ் இலக்கிய வரலாறு -தேவிரா,பாக்கியமேரி.

3. Administration of Union and States with special reference to Tamil Nadu
Refer: Laxmikanth Indian Constitution.and some topics refer Thro internet.

## PAPER –III - General Studies

I. Current events of national and international importance - last 6 months current affairs,you can refer jagranjosh.com, popular magazines and news papers.

2. Current Economic Trends: Indian economy and Impact of global economy on India - News articles related with economics in popular magazines.

3. Socio  Economic Issues in India/ Tamil Nadu
Refer Wizard Social Issues.




BUDDHAN SATTUR



## திரு. சிவ ஆனந்த கிருஷ்ணன் (Food Corporation Of India)

போட்டி தேர்வுகளுக்கு மிகச்சிறந்த புத்தகங்களாக நான் கருதுபவை

• வரலாறு - +1,+2 வரலாறு,NCERT +1,+2,யு.ஜி.சி நெட் வரலாறு வினா வங்கி, இந்திய சுதந்திர வரலாறு - பிபின் சந்திரா ,தமிழக வரலாறு – கே.கே.பிள்ளை ,நவீன வரலாறு – ஸ்பெக்ட்ரம், சென்னை பல்கலைக்கழக பட்டப் படிப்பின் குறிப்பிட்ட புத்தகங்கள்

• புவியியல் – NCERT +1,+2 புத்தகங்கள்,இந்திய புவியியல்- குல்லார்,இந்திய புவியியல் – கோபால் சிங், டி.டி.கே அட்லஸ்

• அரசியல் அமைப்பு - NCERT +1,+2 புத்தகங்கள், நமது இந்திய அரசியல் அமைப்பு- சுபாஷ் கஷ்யப், இந்திய அரசியல் அமைப்பு – லக்ஷ்மி காந்த்

• பொருளாதாரம் – NCERT +1,+2 புத்தகங்கள்,பிரதியோகிதா தர்பன் சிறப்பு பதிப்பு,ஏதேனும் ஒரு வணிக பத்திரிகை

• அறிவியல் - NCERT +1,+2 புத்தகங்கள்(6-12) ,பன்னிரெண்டாம் வகுப்பு தரத்தில் உள்ள மருத்துவ நுழைவு தேர்வு வினா வங்கிகள்

• பொது அறிவு – விகடன் இயர் புக், இந்திய இயர் புக்(இந்திய அரசால் வெளியிடப் படகூடியது), பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் (10 SETS)

• நடப்பு நிகழ்வுகள் – தினமணி,தி இந்து, அகில இந்திய வானொலியின் இணைய தளம்,ஏதேனும் ஒரு மாதந்திர பத்திரிகை

• கணிதம்,திறனறி சோதனை – QUICKER MATHS by TYRA, ARITHMETIC by RAJESH VERMA

குறிப்பு – தேர்வுக்கு படிக்க குறிப்பிட்ட ஒரு புத்தகங்கள் என்று வரையறை கிடையாது.



BUDDHAN SATTUR